தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6

ந.க.எண்.17466/சி1/இ1/2023. நாள். 22.04.2024

********

பொருள் பள்ளிக் கல்வித் துறை – 2023 – 2024ம் ஆண்டிற்கான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசின் நலத்திட்ட உதவிகளை மாணவர்களிடம் சிறப்பாக கொண்டு சேர்க்கும் ஆசிரியர்களை வெளிநாடுகளில் – உலக அளவில்/இந்திய அளவில் புகழ் பெற்ற இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல பள்ளிக்கல்வி இயக்குநருக்கு நிருவாக அனுமதி வழங்கி அரசாணை பெறப்பட்டது - தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு விவரம் தெரிவிக்க கோருதல் - சார்பு

பார்வை 1). மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், செய்தி வெளியீடு எண் 408 நாள் 01.03.2023

2). தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.17466/சி1/இ1/2023. நாள். 25.07.2023, 07.08.2023 மற்றும்

3). அரசுக்கடிதம் எண் 4932/ப.க.7(2)/2023-2 நாள் 08.08.2023 மற்றும் 03.10.2023

4). தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.17466/சி1/இ1/2023. நாள்.18.11.2023, 19.01.2024 மற்றும் 02.03.2024

5). அரசாணை (நிலை) எண் 43 பள்ளிக் கல்வி (பக7(2)த் துறை நாள் 16.02.2024

.........

குறள் 399 *"தாம் இன்புறுவது உல இன்புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்"*

கற்றறிந்த சான்றோர்கள், தாம் இன்பம் பெறுவதற்குக் காரணமாக இருக்கும் கல்வியறிவினால், உலகத்தாரும் சேர்ந்து இன்பம் அடைதலைக் காணும்போது அவர்கள் அந்த கல்வியை மேலும் மேலும் கற்கவே விரும்புவார்கள்,

மேற்கண்ட குறளுக்கேற்ப அரசின் நலத்திட்ட உதவிகளை மாணவர்களிடம் சிறப்பாக கொண்டு சேர்க்கும் ஆசிரியர்களை வெளிநாடுகளில் உலக அளவில் புகழ்பெற்ற இடங்களுக்கு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்ல மாண்புமிகு தமிழக முதல்வரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஆசிரியர்களின் கல்வித்திறன் மற்றும் கற்பித்தல் திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்ட மூன்று படி நிலைகளில் உட்படுத்தி இறுதியில் 75 % மற்றும் அதற்கு அதிகமாக மதிப்பெண்கள் பெற்ற 380 ஆசிரியர்கள் கனவு ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட பட்டியல் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரால் வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| Stage 1 : An online MCQ test | 2008 Teachers Shortlisted out of 8096 participants |
| Stage 2 : Canter based test | 992 Teachers Shortlisted out of 1536 participants |
| Stage3 : Live Demonstration Assessment | 380 Teachers Shortlisted out of 964 participants |

The above tests conducted in 42 subjects Specific tracks by CENTA (Canter for Teacher Accreditation) through Tender and Bidding process

மேற்கண்டவாறு மூன்று நிலைகளில் சரியாக திட்டமிடப்பட்டு விஞ்ஞானபூர்வமாக ஆசிரியர்கள் தத்தம் திறன்களை வெளிப்படுத்திய காரணத்தால் அவ்வாசிரியர்களை ஊக்கப்படுத்துவதாகவும், உற்சாகப்படுத்துவதாகவும், அமையும் என்பதாலும், பிற ஆசிரியர்கள் மத்தியில் இது ஒரு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலும் 90 % முதல் 100 % வரை மதிப்பெண்கள் பெற்ற

வரிசை எண் 1 முதல் 55 வரையிலான ஆசிரியர்கள் கல்வி, கலை, தொழிற்நுட்பம், பாரம்பரியம், கலாச்சாரம், ஆகியவற்றில் சிறந்து விளங்கும் பின்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய வெளிநாடுகளுக்கும் 75 % முதல் 89 % வரை மதிப்பெண்கள் பெற்ற வரிசை எண் 56 முதல் 380 வரையிலான 325 ஆசிரியர்கள் ஏப்ரல் 26 மற்றும் ஏப்ரல் 27 ஆகிய நாட்களில் இரு குழுக்களாக டேராடூன் அழைத்துச் செல்லவும், மே 01-ம் தேதி திரும்ப அழைத்து வரவும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்க்கண்டவாறு தெரிவு செய்யப்பட்ட வரிசை எண் 56 முதல் 380 வரையிலான 325 ஆசிரியர்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது. இப்பட்டியலில் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட விவரத்தையும், அவர்கள் டேராடூன் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களுக்கு கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படவுள்ள விவரத்தையும் தெரிவிக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விமானம் மூலம் அழைத்துச்செல்லும் நேரம் சார்ந்து விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

மேலும், இப்பட்டியலில் உள்ள ஆசிரியர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இருப்பின் அது சார்ந்த விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்கவும்.

<u>இணைப்பு:</u>

பெயர் பட்டியல்

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்:

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்